மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) : அண்மையில் திருச்சிராப்பள்ளியில் சோழர் கால நாணயங்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை.

கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் தொழிற் பயிற்சி ஆசிரியை பதவிகள்.

*163 வினா—திரு கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் இன்னும் நிறைவு செய்யப் படாமலுள்ள இரு தொழிற் பயிற்சி ஆசிரியைகள் (Craft Instructresses) பதவிகளை நிறைவு செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிறைவு செய்யப்பட ஆணைகள் கோரப்பட்ட இரு தொழிற் பயிற்சி ஆசிரியைகளில், ஒரு பதவி 1967ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12-ம் நாள் முதல் இன்று வரைத் தொடர்ந்து பணியில் இருந்து வருகின்றது. மற்றொரு பதவி 1968ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 17ஆம் நாள் முதலிலிருந்து தொடரப்பட்டு 1970ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13ஆம் நாளில் விடுவிக்கப்பட்டது. 1964ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12ஆம் நாளிட்ட ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 574-வது எண் கொண்ட அரசாணையின்படி, பற்றுக் குறை அல்லது உபரி ரூபாய் 10,000-க்கு குறைவாக உள்ள நிதி நிலைமை கொண்ட ஊராட்சி ஒன்றியங்கள், தொழிற் பயிற்சி ஆசிரியைகள் நியமனம் செய்ய, ஊரக வளர்ச்சி இயக்குநரின் ஒப்புதலைப் பெறவேண்டும். எனவே கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தின் நிதி நிலைமையை 1967–68ஆம் ஆண்டிலிருந்து ஆராய்ந்து நிதி வசதி இடம் அளிப்பின், முன்னால் குறிப்பிட்ட அரசாணையில் குறிப்பிட்டவாறு, அவ்விரு தொழிற் பயிற்சி ஆசிரியைகளை நியமனம் செய்யுமாறு, கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் வழியாக, ஊரக வளர்ச்சி இயக்குநரால் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

திரு. கா. வேழவேந்தன் : வளர்ந்து வரும் கைத்தொழில்களினுடைய பயிற்சிகளை அதிகமாக்குவதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் இந்தக் கைத் தொழிற் பயிற்சி ஆசிரியைகளின் எண்ணிக்கையை உயர்த்த அரசாங்கத் திற்கு எண்ணம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த எண்ணத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான தொழிற் பயிற்சி ஆசிரியைகள் நியமிக்கப்படுவார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : From the Hon. Minister's reply, unless the financial position of the Panchayat is all right, no craft instructresses would be appointed. Would the Government revise its policy and whether the financial position is sound or not, appoint craft instructresses?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பத்தாயிரம் ரூபாய்க்குக் குறைவாக உள்ள இடங்களில் ஒருவரை நியமிக்கலாம். பத்தாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு வசதியுள்ள இடங்களில் இரண்டு பேர்களை நியமிக்க லாம். அதுவும் ஊரக வளர்ச்சி இயக்குநருடைய அனுமதி பெற்று நியமிக்க வேண்டும். அனுமதி பெறாமல் இரண்டு பேர்களை நியமித்து விட்டார்கள். ஒருவர் இருக்கிறார். மற்றவருக்குத் தேவை இருக்குமானால், அதற்கேற்ற அளவு நிதி வசதி பெருகியிருக்குமானால் மற்றொருவரை நியமிக்கலாம் என்று ஆணை இடப்பட்டிருக்கிறது.

சுறா மீன் எண்ணெய் தயாரிப்பு நிலையம்.

*164 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வங்காள விரிகுடாக் கடலில் வாழும் நெடிய சுறாமீன்களைப் பிடித்து, "ஷார்க் லிவர் ஆயில்" தயாரிக்கும் பெரிய தொழிற்சாலை ஒன்றை விரை வில் உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, கடல் செல்வமான சுறா மீன்கள் ஏராளமாக இருப்பது கடலில் குளிக்கச் செல்கிறவர் களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் அறிவிப்புகள் மூலமாகத் தெரிய வருகிறது. ஆகவே, மத்திய அரசு தொழில் வளத்தைப் பெருக்க வேண்டும் என்று நாமெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறபடி, கடல் வளம் முழுதும் பயன்படுத்தும் வகையில் ஷார்க் லிவர் ஆயில் தயாரிக்கும் தொழிற்சாலைகளை விரிவாக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் இந்த ஆண்டேனும் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்பொழுதே தஞ்சை மாவட்டத்தில் நான்கு நிலையங்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு நிலையமும், திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு நிலையங்களும் இந்த சுறா மீன் எண்ணெய் தயாரிக்கும் நிலையங்கள் இருக்கின்றன. ஆனாலும், 50,000 கிலோகிராம் எண்ணெய் கிடைக்கும் வகையில் நிலைமை இருந்தால் அந்தத் தொழிற்சாலையை நாம் நடத்த முடியும். இந்த ஏழு நிலையங்களிலும் உற்பத்தியாவது தூய்மைப்படுத்தப்படாத எண்ணெய் தான். அந்த எண்ணெயைக் கேரளாவிற்கு அனுப்பி விடுகிறோம். கேரளாவில் ஒரு சோப் தயாரிக்கும் தொழிற்சாலையை அரசாங்கமே நடத்துகிறது. அவர்கள் செய்வதைப் போல் நாமும் இங்கே செய்ய வேண்டும் என்றால் குறைந்த பட்சம் 50,000 கிலோகிராம் எண்ணெய் எடுக்க வேண்டிய அளவுக்கு சுறா மீன்கள் கிடைக்கவேண்டும் பெரிய சுறா மீன்கள் நமக்குக் கிடைக்கின்றன என்றாலும், அவற்றைச் சங்கிலி போட்டுப் பிடிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். சங்கிலி போட்டுப் பிடிக்கக்கூடிய அளவுக்கு நாம் செய்தால் அந்த அளவுக்கு லாபம் கிடைக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, கிடைக்கின்ற சுறா மீன்களைப் பிடித்து, தூய்மைப்படுத்தப்படாத எண்ணெயை மாத்திரம் தற்சமயம் கேரளாவிற்கு அனுப்பிவைக்கிறோம்.